# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். NC 2445/F/2022 in SA 7952/F/2020**

திரு.ர.சாஜித் பாஷா, — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர்,
சென்னை-600 001. --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

ஆணையத்தால் 23.12.2020 அன்று SA 7952/F/2020 வழக்கில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> **“மேல்முறையீட்டாளர் 13.03.2020 தேதியிட்டு கோரிய முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

**தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது".**

2. அதனைத்தொடர்ந்து இவ்வழக்கு மீண்டும் 10.08.2022 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**"மேல்முறையீட்டாளர் 17.06.2021 தேதியிட்டு தனது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ல் கோரும் தகவல்களில் தற்போதைய நிலை குறித்து உரிய முறையில் விசாரணை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் விடுபட்ட இனங்களான இனம் 2 மற்றும் 7-க்கான விரிவான பதிலினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன் படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்தில் சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது. மேலும், பொது தகவல் அலுவலர் அதற்கான தகவல்களை அளிப்பதாக இன்றைய விசாரணையில் உறுதியளித்தார். இந்நிலையில், மேல்முறையீட்டாளரும் விடுபட்ட தகவல்களை பெற்றுகொள்வதாக அதனை ஒப்புக்கொண்டதன்பேரில் இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு முற்றாக்கப்படுகிறது".**

2. மேற்சொன்ன ஆணை நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்து மனுதாரர் 29.09.2022 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆணை நிறைவேற்றாமை மனு ஆணையத்தால் பெறப்பட்டு NC 2445/2022 ஆக பதிவு செய்யப்பட்டு, மேற்சொன்ன ஆணை நிறைவேற்றாமை மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, 01.07.2025 அன்று ஆணையத்தின் நேரடி விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. இன்றைய (01.07.2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.S.சையத் ஜாபிர், பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர், சென்னை-01 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணையின்போது ஆணையத்தின் மேற்சொன்ன 10.08.2022 தேதியிட்ட ஆணை நிறைவேற்றப்படாதது குறித்து, பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரணை செய்த போது பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 05.09.2022

தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் 2 மற்றும் 7-க்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையத்தின் முன் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் மனுதாரர் பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என்று தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. மேலும், இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள், மற்றும் மனுதாரரின் வாதுரைகள் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாறான பரிசீலனையில் மனுதாரர் கோரிய இனம் 2-க்கு வழங்கப்பட்ட தகவல்கள் சரியானதே என்று ஆணையம் ஏற்றுக்கொள்கிறது. இந்நிலையில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **இன்றைய விசாரணையில் மனுதாரர் கோரிய இனம் 7-க்கு புதிய குழுவின் பதவிக் காலத்தில் கட்டுமானம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்கு வக்ஃப் வாரியத்தால் ஏதேனும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா மற்றும் சீரமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்த தகவல்களை வழங்குமாறும், Voucher and bill-ன் நகல்களை வழங்க தேவையில்லை என்றும், இனம் 7-க்கு மேற்சொன்ன தகவல்களை மட்டும் இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பிவிட்டு, அதனை மனுதாரரும் தேதியிட்டு கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலையும் அது குறித்த அறிக்கையினை 24.07.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 2445/F/2022 in SA 7952/F/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொது தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர்,
சென்னை-600 001.

**<u>மனுதாரர்:-</u>**

திரு.ர,சாஜித் பாஷா,
எண்.45/28, மஞ்சக்கொல்லை தெரு,
அமைந்தகரை,
சென்னை-600 029.

Copy to: File NS/PA-